# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்

J
A
M
A
K
K
A
R
A
N



**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15


**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 8**

**AUGUST 2023 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

கர்த்தரின் கிருபை பாதுகாப்பு உங்களோடு இருப்பதாக.

இந்த மாதம் நம் இந்திய தேசம் **சுதந்திரம்** அடைந்த நாளை நினைவு கூறும் மாதமாகும். இந்தியாவின் அருகே **வட கிழக்காக** அமைந்த குட்டி மாநிலங்களின் ஒன்றுதான் **மணிப்பூர்.** இது இந்திய தேச வரைபடத்தில் கிழக்கு பகுதியில் அசாம் மாநிலத்தின் அருகே உள்ளது. அந்த **மணிப்பூரில் கடந்த 3 மாதங்களாக** மக்களுக்கு நடந்த கொடுமைகளும். **பற்றி எரியும் ஆயிரக்கணக்கான**



## சுதந்திர தின வாழ்த்துதல்

இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க முயற்சித்த தியாகிகளுக்கும் நன்றி. இந்தியாவின் அனைத்து மாநிலத்தில் உள்ள ஆயிரக் கணக்கானவர் ஜாதி, மத, இன மொழி இன வேறுபாடின்றி அரும்பாடுகள்பட்டு பல கொடுமைகளை சகித்து, இந்தியாவிற்கு சுதந்திரம் பெற போராடியவர்களின் சரித்திரங்களை படிப்பது நல்லது. அவர்களுக்காக அவர்கள் குடும்பத்துக்காக நாம் நன்றியுள்ளவர்களாக அவர்களை நினைவு கூறி நம் கர்த்தரை துதிப்போம்.

ஜெய்ஹறந்த்

# AUGUST - 2023



**தேவாலயங்களும்,** மக்கள் வசிக்கும் **வீடுகளும் எரிந்துகொண்டிருக்கின்றன.** அந்த வீட்டில் வாழ்ந்த **பெண்களை பிடித்து** கைகளில் கயிறுகொண்டு கட்டி ஒரு பொட்டு துணிகூட சரீரத்தில் இல்லாத நிலையில் பொது **மக்கள்**முன் **பெண்களை நிர்வாணமாக்கி** வீதிகளில் அந்த வாலிப பெண்கள் ஊர்வலமாக இழுத்துக்கொண்டு போன வீடியோ YouTube காட்சிகள் **உலகத்தையே உலுக்கி** கலங்க வைத்தன. ஒரு பெண்ணை நான்கு ஐந்துபேர் ஒரே நேரத்தில் **கற்பழித்து** சரீரத்தை சின்னபின்னமாக்கிய கொடூரம் உலகத்தில் எங்கும் நிகழ்ந்ததில்லை. இது இந்தியாவில் முதன்முறையாக நடந்த கொடூரமாகும்.

**பாப்புவா** நியுகினி தீவுகளில், **ஆப்பிரிக்கா** நாடுகளில் உள்ள **காட்டுவாசிகளிடம்** கூட நடந்திராத இந்த **கொடூர சம்பவம்** நம் **சுதந்திர நாட்டில்**. ஜனநாயக நாட்டில் **BJP ஆட்சியில்** நடந்துவிட்ட சம்பவம் ஆகும். இது கடந்த நான்கு மாதங்களாக நடந்துகொண்டே இருக்கும் சம்பவம் அகும். கடந்த 4 மாதங்களுக்கு மேல் எரிந்துகொண்டிருக்கும் மாநிலமாக அறியப்படுகிறது. இதை எழுதும் மாதத்திலும் **மத கலவரம், இனக் கலவரம்** நின்றபாடில்லை. இன்னும் **வீடுகள் பற்றி** எரிந்துகொண்டுதான் இருக்கிறது.



இந்நிலையில் **சுதந்திர தின வாழ்த்து** இந்தியாவில் ஒருவருக்கொருவர் கூறி எப்படி சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ளமுடியும். என்னால் வாழ்த்து கூற இயலவில்லை. நடந்த சம்பவங்களை நேரில் பார்ப்பதைபோல் You Tube, வீடியோவிலும் பார்த்து கொண்டிருக்கும் காட்சிகளை ஜெபத்துக்காக கூட அந்த நிர்வாண படங்களை மற்றவர்கிளிடம் பகிர்ந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் வாசகர்கள் மட்டும் அறிந்து அதன் கோரத்தையும், வக்கிரத்தையும் அறிந்து பாரத்தோடும் கண்ணீரோடும் ஜெபிக்க முடியும் என்பதற்காக மட்டும் படங்களை வெளியிட்டேன். இதைப் பார்த்து சிலர் இந்தப் படத்தை நீங்கள் வெளியிட்டிருக்க கூடாது என்றும் நினைப்பீர்கள் என்று அறிவேன்.

# மன்னியுங்கள் மணிப்பூர் சகோதரிகளே !

முன்னால் MLA ஒருவர் **மேலே எழுதியுள்ள தலைப்பில்** இலக்கிய வடிவில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதை அடுத்த பக்கம் வாசியுங்கள் அவரோடு சேர்ந்து நாமும் மானசீகமாக நம் துக்கத்தை பகிர்ந்துகொள்வோம். **மணிப்பூரில்** அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் பெண்கள் உடையில்லாமல் கழிப்பிடம் இல்லாத நிலையில். உணவு, தண்ணீர் போதுமான அளவு கிடைக்காத நிலையில் **சொந்த நாட்டிலேயே** அகதிகள் போல முகாமில் அனாதைகள்போல் வாழும் அப்படிப்பட்ட பெண்களிடமும், **கற்பழிக்கபட்டு பாதித்த பெண்களிடமும்** மன்னிப்பு கேட்கிறோம். இப்போதும் இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்து **மணிப்பூர்** சென்ற மருத்துவ குழுவினரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் பெண்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். **எல்லா அதிகாரமும் பெற்ற இந்திய பிரதமரே** கண்மூடி. **காதையும் வாயையும் பொத்தி தலைகுனிந்து** கையாலாகாத இந்திய **பிரதமர்** என்ற நிலையில் **தன் இருதயத்தை** கடினப்படுத்தி கொண்டிருக்கும்போது சாதாரண பொது **ஜனமாகிய** நாம் நம் கையாலாகாத தனத்தை ஒத்துக்கொண்டு **மணிப்பூர் பெண்களிடம் மன்னிப்பு கேட்போம்.** வழமையாக எல்லோரிடமும் கூறும் வார்த்தையான ?. ஜெபிப்போம் என்ற வார்த்தையை தவிர வேறு என்ன சொல்ல ?

**மன்னிப்பு கவிதையை** எழுதிய இந்த கட்டுரைக்கு **அர்த்தமுள்ள வரைபடம் வெளியிட்டிருக்கிறார்கள். அதை மறுபக்கத்தில் பார்க்கலாம்.** BJP அரசாங்கம் **பாரத தாய், பாரத மாதா** என்றெல்லாம் வர்ணிக்கும் அந்த பாரத **பெண்ணை** மணிப்பூர் **சகோதரிகளாக கற்பனை** செய்து **பாரத மாதாவை** (தாய்) **நிர்வாணமாக்கி** சுதந்திர தினத்தில் பறக்கவிடும் **மூவர்ணக்கொடியை** பிடுங்கி **இது மணிப்பூரில் பறக்க லாயக்கில்லை.** பெண்களின் **நிர்வாணத்தை மறைக்கவே** இந்த **தேசிய கொடி** பயன்படும் என்று போர்திய நிலையில் பாரத மாதாவை அறை குறையாய் உடலில் போர்த்திபடி **ஊரே காண** அழைத்து வரும அந்த காட்சி படம் **மிக அர்த்தமுள்ளது.** அதை வரைந்தவரையும் கட்டுறையை எழுதியவரையும் நான் வாழ்த்துகிறேன்.

**மன்னியுங்கள்** மன்னியுங்கள் என்ற கட்டுரையுடன் **காய்ந்துபோன கண்ணீர்** என்ற கட்டுரைளயையும் இத்துடன் இணைக்கிறேன்.

# மன்னியுங்கள் மணிப்பூர் சகோதரிகளே

**உங்கள் ஆடைகள்**
அவிழ்க்கப்பட்ட
காட்சிகளில் தெரிகிறது
பாசிஸத்தின்கோர முகங்கள்
**யாரும் தொடாமலேயே**
**அரைக்கம்பத்தில் பறக்கிறது**
**அவமானத்தில் தெரிகிறது**
**அசோக சக்கரம்**
எதேச்சதிகார மௌனத்தை
உடைத்து கேள்வி எழுப்புகின்றன
நீதிகள் சுத்தியல்கள்
**நிலமெங்கும்**
முளை விடுகிறது
போராட்டங்கள்
குஜராத்தில்
பில்கீஸ் பானு
**காஷ்மீரில்**
ஆசிஃபா
**உத்ராவில்**
ஒடுக்கப்பட்ட சகோதரி
அதன் வரிசையில்
**இப்போது நீங்கள்**
ஏகலைவனின்
**கட்டை விரலை**
**வெட்டியவர்கள்**
**சம்புகளை**
கொன்றவர்கள்
**நாளந்தாவை**
எரித்தவர்கள்
**நந்தனைக்**
கொன்றவர்கள்
இப்போது **இம்பாலில்**
சுற்றி வருகிறார்கள்
உங்கள் கதறல்களைக் கேட்டு
பதறித் துடிக்கின்றன
மலையடிவாரப் புறாக்கள்
**உங்கள் கண்ணீரில்**
**நனைந்த ஈர நிலத்தில்**
**முளைக்கின்றன தீக்குச்சிகள்**
**கிழகத்தின் வெப்பத்தில்**
பொங்கட்டும்
**வடக்கில் இருக்கும்**
**ஃபாசிஸத்தின் அரண்மனைகள்**
மணிப்பூர் சகோதரிகளே
எங்களை மன்னியுங்கள்
**இதயமற்றவர்களோடு**
**வாழ்கிறோம் என்பதற்காக**
காத்திருங்கள்
கரையோரத்தில் கருவாகிவரும்
புயலுக்காக



*இலக்கிய கவிதையோடு புதுவையிலிருந்து மற்றறோரு கண்ணிர் கட்டுரை*

# காய்ந்துபோன கண்ணீர்

அவமானப்படுத்துவதென்பது
அவ்வளவு எளிதில் நடந்துவிடுகிறது

அழுதழுது காய்ந்துபோன
இறுதிக் கண்ணீரும்
அவளிடமிருந்து
அத்தனை கோபமாய்
வழிந்து கொண்டுதானிருக்கிறது

நிர்வாணப்படுத்தி அழைத்துப்போகும்
வன்முறையை மீறியதொரு துயரத்தை
பெரும்பான்மையாய்
பெண்களுக்கு அமைத்து கொடுப்பதில்
அவனுக்குள்ளெழும் வன்மம்
மானுட நிராகரித்தலின் உச்சம்

மகிழ்வுச் சாம்பலில்
கால்விரல் பதித்துப் பழகிப்போன
ஃபாசிஸத்தின் ஏழையின் பிறப்பு

**பழங்குடி தொன்மையின் தொடர்ச்சி**
**சுற்றுலாத் தலங்களாய் மாற்றப்பட்ட**
பகுதிகளெங்கும் வாழக்கூடிய
இயற்கையின் இறுதி நம்பிக்கை

காண்பவை யாவற்றையும்
காசாக்க முயற்சிக்கும் சமூகத்தில்
சிக்கித் தவித்துப் போராடும்
எளியவர்களுகாக
கோபமெழாதவரை
உரிமைக்காள குரல்களணைத்தும்
கோழைகளின் தொண்டைக்குள்
ஒடுங்கியே கிடக்கின்றன



# மௌனம் காக்கும் பிரதமர்



**மணிப்பூர்** மாநிலம் பற்றி எரிகிறது.. பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதியில் இழுத்து வருகிறார்கள். சில பெண்கள் வெளியரங்கமாக கற்பழிக்கப்படுகிறார்கள். இவைகள் அத்தனையும் உலக நாடுகளும், இந்திய தேசமும் வீடியோவிலும் Youtubeபிலும் பார்த்து அதிர்ச்சிக்குள்ளாகி கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தனையும் அரசாங்க உளவு துறை மூலம் நம் பிரதமர் அறிந்தும் நாட்டை காக்க வேண்டிய பிரதமர் ஒரு ஆறுதல் வார்த்தைகூட சொல்லாமல் பல வெளிநாடுகளுக்கு பறந்துகொண்டிருக்கிறார். எந்த நாட்டு தலைவர்களாவது இப்படி கண்மூடி மௌனமக இருந்திருக்கிறார்களா? எத்தனை பெரிய அலட்சியம்.

பிரதமரின் மௌனத்தின் அர்த்தம் என்ன ? பிரதமரின் உண்மை நோக்கங்கள் கொஞ்ஜ கொஞ்ஜமாக வெளிவர துடங்கியிருக்கிறது.

மணிப்பூர் மாநிலத்தில் 3 இன மக்கள் உண்டு. 1) குக்கி 2) மெய்தேய் 3) நாகா இவர்களின் பிரச்சனை 1000 வருடமாக நீர்பூத்த நெருப்பாக புகைந்துகொண்டே இருக்கிறது.

**குக்கி** இன மக்களின் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்கள். இவர்கள் மலையில் வாழ்கிறார்கள். மெய்தேய், நாகாபோன்ற இன மக்கள் பள்ளத்தாக்கில் வாழ்கிறார்கள். குக்கி இன மக்கள் வாழும் வனப்பகுதியில் ஏராளமான **கனிம வளங்கள்** நிறைந்துள்ளது என்று கண்டு பிடித்துள்ளனர். சுமார் 80% சதவித இடம் மலையில் சூழ்ந்துள்ளது. **ஜியாலிஜிக்கல் சர்வே ஆப் இந்திய** நடத்திய ஆராய்சியில் அந்த காட்டு பூமியில் **மேக்னைட்,** அசூரைட், **நிக்கல்,** மலாகிட், பிளாட்டினம், தாமிரம் உள்பட விலை மதிப்பற்ற உலேகங்கள் நிறைந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகறது. ஆளும் BJP அரசாங்கத்துடன் நெருங்கிய உறவு வைத்துள்ள **அதானி** குடும்பம் வெடி வைத்து வெட்டி எடுக்கும் சுரகங்களை உண்டாக்க அந்த காட்டுப்பகுதியை உரிமையாக்க துடிக்கிறார்கள். இதை அறிந்த **குக்கி** இன மக்கள் அந்த காடுகளை அழிக்கவோ வெடி வைத்து சுரங்கம் அமைப்பதையோ விரும்பவில்லை. குக்கி இன மக்கள் அந்த வனப்பகுதியை யாருக்கும் விற்கவோ, வேறு யாரையும் அங்கு குடியமர்தவோ விருப்பப்படவில்லை.

குக்கி மக்களை அழித்தால் மட்டுமே அந்த நிலத்தை வாங்கி அந்த வளங்களை வெட்டி எடுத்து கோடி கோடியாய் பணம் உண்டாக்கலாம் என்று திட்டமிட்டு BJP அரசு **மெய்தேய்** இன மக்களை ஏவிவிட்டு அவர்கள் கையில் ஆயுதங்களை கொடுத்து **குக்கி** இன மக்களையே அழிக்க இரகசிய திட்டமிட்டனர். அதற்கு வசதியாக அங்கு கவர்னராக **மெய்தேய்** இனத்திலிருந்த ஒருவரை BJP அரசாங்கம் நியமித்திருக்கிறது. **மெய்தேய்** இனமக்கள் பெரும்பான்மை உள்ளவர்கள். ஆகவே தேர்தலில் மெய்தேய் இனத்தை சேர்ந்தவரே **முதல்வராக** தெரிந்தெடுக்கப்பட்டார். ஆக கவர்னர்

மெய்தேய் இனத்தவர், BJP கட்சியை சேர்ந்தவர். மணிப்பூர் முதல்வர் மெய்தேய் இனத்தை சேர்ந்தவர். அதனால் தான் இதை **இரட்டை இஞ்ஜின் அரசாங்கம்** என்று அழைக்கப்படுகிறது.

பிரதமர் மோடி ராணுவத்தை அனுப்பியிருந்தால் ஒரே நாளில் மணிப்பூர் கலவரம் நீங்கி இத்தனை கொலைகளும், ஊரையே தீயால் கொளுத்தி 450 கிறிஸ்தவ தேவாலயங்களை தரை மட்டமாக்கியிருக்க மாட்டார்கள்.

மணிப்பூரில் குக்கி இன ஆதிவாசிகள் மட்டும் பாதிக்கப்பட்டவில்லை. **மெய்தி** இனத்தில் வாழும் **கிறஸ்தவ ஆலயங்களும்** எரிக்கப்பட்டன. **மெய்தி** பெண்களும் கற்பழிக்கப்பட்டனர்.

**அரம்பை தெங்கோல்** என்ற இனம் சிறிய எண்ணிக்கையில் உண்டு. இவர்களோடு **மெய்தி** இன மக்களில் உள்ள **கிறிஸ்தவர்கள்** அனைவரையும் அழிக்க ஏற்பாடு செய்ததே இந்துதுவத **இயக்கமும்** RSS இயக்கமும்தான் இவர்கள்தான் **மெய்தி** இன வாலிபர்களுக்கு **மயக்க மருந்தும், பணமும் ஆயதமும்** கொடுத்து **கிறிஸ்தவர்களை** குறிவைத்து தாக்க அழுத்தம் கொடுத்தார்கள.

பிரதமரும் Home Ministerக்கும் உளவு துரை ஒவ்வொரு நிமிடமும் நாட்டில் மூலை முடக்கில் நடக்கு நிகழ்ச்சிகளை அறிவித்துக்கொண்டேயிருப்பார்கள். ஆனால் பிரதமருக்கும் மணப்பூரிலேயே தங்கியிருக்கும் நாட்டின் **முதல்வருக்கும்** நடந்தது ஒன்றும் தெரியாது என்று துணிந்து பொய் பேசுசினார்கள்.

நீங்கள் இதற்கு முன் பக்கத்தில் கண்ட நிர்வாண படம் வீடியோவிலும் YouTube வெளிவந்த உடன்தான் நாங்கள்அங்குள்ள நிலையின் கோரத்தை அறிந்தோம் என்று கூறுகிறார்கள்.

பிரதமரின் **மௌனத்தின்** முன்அனுபவத்தை **மணிப்பூரிலும்** பயன்படுத்தினார். பிரதமர் **குஜராத்தில் முதல்வராக** இருந்த போதுதான் **கோத்ரா** கலவரம் உண்டானது. அப்போது RSS **பஜ்ரங்தல்** தீவரவாதிகளுக்கு கொடுத்தாக கூறப்படும் செய்கை என்ன தெரியுமா? நான் 3 நாள் மௌனமாக இருப்பேன். அதற்குள் நீங்கள் நாட்டில உள்ள **இஸ்லாமியரை** கொன்று குவிக்க வேண்டும். 3 நாட்கள் **போலீசும் வெளியே போகக்கூடாது** என்று எழுதப்படாத அறிவிப்பு சொன்னது. அவ்வளவுதான் ஆயிரக்கணக்கில் முகமதியர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அந்த அனுபவத்தை மணிப்பூரில் செயல்படுத்தினார். **4 மாத மௌனம்** கிறிஸ்தவ தேவாலயங்கள் **கிறிஸ்தவ** வீடுகள் தீக்கு இறையாகப்பட்டன.

பிரச்சனை உருவான இரண்டாம் நாளிலேயே **இந்திய ராணுவத்தை** இறக்கியிருந்தால் இத்தனை கோரமும் ஏற்பட்டு இருக்காதே. **ஏன் ராணுவத்தை இறக்கவில்லை?** மௌனம் தான் பதில்.

உலகின் பல நாடுகளுக்கு நிர்வாண ஊர்வல காட்சி சென்றது. சுமார் 14 நாடுகள் அவசரமாக பாராளுமன்றத்தை கூட்டி மோடிக்கு கண்டன தீர்மானமும் எச்சரிப்பும் கொடுத்தனர்.

மோடி யோகாவை உலகம் முழுவதும் அறிமுகப்டுத்துவதில் சிறந்தவர்ரல்லவா!. இந்தியாவில் வாழும் **கிறிஸ்தவர் முஸ்லீம்** போன்ற சிறுபான்மையினரை **அழிப்பதிலும் சிறந்தவர்** என்பதை அறிவித்தனர். இது இந்திய பிரதமருக்கு பெரும் தலைகுணிவும் அவமானமும் ஆகம். இந்தியர்களாகிய நமக்கும் மணிப்பூர் குஜராத் விவகாரம் பெருத்த அவமானமாகும். இனி இந்திய பிரதமர் மோடிக்கு எந்த நாட்டிலும் சிவப்பு கம்பள வரவேற்பும் மரியாதையும் கிடைக்காது. இந்திய நாட்டுக்கே அவமானத்தை ஏற்படுத்தி விட்டார். நாமும் தலைகுணிந்து நிற்போம்.

# மதம் வேறு ! ஜாதி வேறு

# சுதந்திர இந்தியாவின் இன்றைய நிலை

நாங்குநேரி மட்டுமல்ல **தமிழகம் முழுவதும்** ஏராளமான **சாதிக் கொடுமைகள்** தலைவிரித்தாடுகின்றன. என்ன நடக்கிறது ? என்ற கள நிலவரத்தை அறிய மாநிலம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட பிரபல பத்திரிகையில் ஒரு டீம் களமிறங்கியது.

☐ முதலில் **மேற்கு** மண்டலத்துக்கு வருவோம். **கோவை கிணத்துகடவு,** தொண்டாமுத்தூர், **பொள்ளாச்சி** போன்ற பகுதிகளில் உள்ள சில **இந்து கோவில்களுக்குள்** பட்டியலின மக்கள் உள்ளே சென்று **சாமி கும்பிட முடியாது. தமிழ்நாட்டை** ஆண்ட, **ஆளுகின்ற** அனைத்து கட்சிகளும் வெட்கமின்றி கூறுகின்றனர். காலங்காலமா இதுதான் வழக்கம் என்று சகித்துக்கொள்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ADMK, DMK ஆகிய கட்சிகள் மாறி மாறி தமிழ்நாட்டின் ஆட்சியை பிடித்தும் இந்த **ஜாதி நிலை** மாறவில்லையே!

☐ **ஆளும் அரசிலிலும்** இந்த **சாதி வன்மம்** வெளிப்படையாகவே தெரிகிறது. **தன் கட்சியைச்** சேர்ந்த **பட்டியலின** நிர்வாகிகளின் **வீட்டு சுபகாரியங்களுக்கோ, துக்க நிகழ்வுகளுக்கோ** செல்கையில் மரியாதை நிமித்தமாகத் **தண்ணீர்கூட** குடிப்பதில்லை என்கின்றனர் இப்பகுதியை சேர்ந்த **பட்டியலின** அரசியல் கட்சிப் பிரமுகர்கள். என்ன அரசாங்கம் இது?

**ஈ. வெ. ரா. பெரியார் மண்ணில் தீண்டாமை**

☐ **பெரியார்** பிறந்த மண்ணான ஈரோடிலும் **தீண்டாமை** தொடர்கிறது. சில குறிப்பிட்ட **சமுதாயத்தைச்** சேர்ந்த குடும்பங்களின் **திருமணங்களில் அருந்ததியர்** சமுதாய மக்கள் **கல்யாண பந்தலில் மற்றவர்களோடு அமர்ந்து சாப்பிட அனுமதியில்லை.** மண்டபத்தின் **பின்புற வாசல்** வழியாக வந்து பிச்சைக்காரர்கள்போல் **பாத்திரத்தில்** உணவு வாங்கிச் செல்லலாம். அவ்வளவுதான் அந்த ஜாதி மக்களுக்கான **உரிமை** என்கிறார்கள். என்ன ஒரு **கீழ்தரமான** அவமான செயல் இது !

☐ இவ்வளவு ஏன், **பவானிசாகர்** தொகுதியின் **அ.தி.மு.க எம்.எல். ஏ**. வான **பண்ணாரி என்பவர் கூறுகிறார். அரசு அதிகாரிங்கள்கூட** என்னை மதிக்கிறதுமில்லை. நான் என் தொகுதி மக்களுக்காக வைக்கிற கோரிக்கைகளை **நிறைவேற்றுவதுமில்லை. சாதி ரீதியாக** என்னைப் **பரிகாசம் பண்றாங்க** என்று **குமுதம் ரிப்போர்டர்** இதழில் ஓப்பனாக மனம் நொந்து வெடித்திருந்ததைவிட வேறு உதாரணங்கள் தேவையில்லை.

☐ **புதுக்கோட்டை** மாவட்டம் **நெடுவாசல்** கிராமத்தில் உள்ள **குளத்திலும்** கறம்பக்குடிக்கும் **கந்தர்வக்கோட்டைக்கும்** இடையில் உள்ள **மீனம்பட்டி** கிராமத்தில் உள்ள **குளத்திலும்** பட்டியல் இனத்தை சேர்ந்தவர்கள் குளிப்பதற்கு **அனுமதி கிடையாது.** என்ன கொடுமை இது. இவைகளை ஆளும் கட்சியான தி.மு.க அரசாங்கத்தின் முதல்வர்கூட கண்டுகொள்ளவில்லை.

**தப்பு அடித்த தலைமை ஆசிரியர்**

☐ **புதுக்கோட்டை** மாவட்டம், **வண்ணாரப்பட்டி** பஞ்சாயத்துத் **தலைவராகப் போட்டியிட பட்டியல் இனத்தைச்** சேர்ந்த **ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரான கருப்பையாவின்** கழுத்தில் தப்பு என்கிற தோல் கருவியை மாட்டிவிட்டு அதனை அடித்தபடி **சாமியிடம் அனுமதி கேட்கும்படி** கட்டாயப்படுத்திய **வன்மம்** அரங்கேறியது. அதையும் அந்த தலைமை ஆசிரியர் செய்துவிட்டுத்தான் அவர் **தேர்தலில் நின்று வெற்றிபெற்றார்.** இது எப்போதோ நடந்த சம்பவம் அல்ல. நாங்கள் பெரியார், அண்ணா வழி வந்தவர் என்று பெருமைபட்டுக்கொள்ளும் ஆளும் கட்சியில் நடப்பு ஆண்டிலேயே நடந்த கேவலமாகும்

☐ **திருச்சி** மாவட்டம் **பண்ணங்கொம்பு** அரசு துவக்கப்பள்ளி **தலைமை ஆசிரியர்** ஆரோக்கியசாமி, **ஒரு குறிப்பிட்ட ஜாதி** மாணவர்களுக்கு ஒரு வகுப்பறையும் **பட்டியலின மாணவர்களுக்கு ஒரு தனி வகுப்பறையும் ஒதுக்கியுள்ளனர். பட்டியலின ஜாதி மாணவர்களுக்கு** மட்டும் **கழிவறையையும் சுத்தப்படுத்தும் வேலையைக் கொடுத்துள்ளார்கள்.** இது மாவட்ட **கல்வி அதிகாரியின்** கவனத்துக்குச் சென்றதால், **தலைமை ஆசிரியரையும் தனலட்சுமி என்கிற வகுப்பு ஆசிரியையும் சஸ்பென்ட் செய்தார்.** துணிந்து நடவடிக்கை எடுத்த மாவட்ட கல்வி அதிகாரியை பாராட்டுகிறேன்.

**சம்பளம் வாங்கு... சமையல் செய்யாதே !**

☐ **மணப்பாறை** பகுதி **பின்னத்தூர்** பள்ளியில் **சமையலராக** பட்டியலினத்தைச் சேர்ந்த **புஷ்பம்** என்ற பெண் நியமிக்கப்பட்டதால் மற்ற ஜாதியினர் தங்கள் **பிள்ளைகளை பள்ளிக்கு** அனுப்பவில்லை. பிரச்சனை பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது என்று அறிந்த உடன் அந்த பெண்ணிடம் **சம்பளத்தை வாங்கிக்கோ, சமையல் செய்யக்கூடாது** என்று கூறிய ஊர்காரர்கள் வேறு ஜாதியில் உள்ள ஒருவரை தங்கள் செலவில் **சமையல் செய்ய** நியமனம் செய்தார்கள். பட்டியலின பெண் **புஷ்பா** வேலை செய்யாமலே **மாதா மாதா சம்பளம்** வாங்குகிறார். அந்த புஷ்பா அதிர்ஷ்டக்கார பெண், வேலை செய்யாமல் சம்பளம் வாங்குகிறாள்.

இந்த பட்டியலின ஜாதியை சேர்ந்த புஷ்பாவை பற்றி அறிந்தால் அவளை சமைக்க அனுமதிக்கவில்லை. ஆனால் சென்னையில் மட்டும் பெரும்பான்மையான பெரிய ஓட்டல்

கடைகளில் சமையல் அறைக்குள் சமைத்துக்கொடுக்கும் சாப்பாட்டை, பலகாரங்களை இந்த ஜென்மங்கள் ருசித்து சாப்பிடவில்லை? சமைத்தவர் என்ன ஜாதி என்றா இவர்கள் விசாரிக்கிறார்கள்.

சென்னையில் 5 நட்சத்திர ஓட்டல்களில் **காடை** இறைச்சிக்கு பதில் **காக்காய்** இறைச்சியை பல வருடங்களாக சமைத்துப்போட்டது யாரும் அறியவில்லை. ஒரு சனல் சாக்கு பையில் நிறைத்து காக்காக்களை பிடித்து சப்ளை செய்யும் நபரை போலீஸ் கையும் களவுமாய் பிடித்து விசாரித்து அந்த 5 நட்சத்திர ஓட்டலுக்கு சீல் வைத்தனர். இங்கு சாப்பிடுகிறவர்கள் உள்ளே சமைக்கிறவர் புஷ்பாவா, வேறு ஜாதி உள்ளவரா என்று கேட்பதில்லையே.

☐ **திருப்பூரில்** பல பகுதியிலும் குறிப்பாக பெரம்பலூர் மாவட்டம் **பேரளியிலும் திருவண்ணாமலை** மாவட்டம் **சிறுவள்ளூலிரும்** இரட்டை **குவளை முறை** தாண்டவமாடுகிறது. அதாவது இரண்டுவித டீ குடிக்கும் டம்ளர் உபயோகிக்கிறார்கள். குறிப்பிட்ட ஜாதிக்கு குடிக்க தண்ணீர் டம்ளர், **தாழ்ந்த ஜாதியினருக்கு** தனி டம்ளர் இப்படிப்பட்ட உண்மை நிகழ்ச்சியைதான்சினிமாவில் அப்பட்டமாக காண்பித்தும் இவர்களுக்கு புத்தி வரவில்லையே!

☐ **குன்னம்** அருகே **கொளப்பாடி பட்டியலினத்தவ**ர் அங்குள்ள **கோவில் குளத்தில்** நுழையக்கூடாது என்ற கட்டுப்பாட்டை **பிற சாதியினர் விதித்திருந்தனர்.** மீறி நுழைந்ததால் **கோயில் குளத்தில் கரண்ட் கம்பியை** செலுத்தியதால் பட்டியலின மக்கள் சிலர் **இறந்த சோகம்** சில ஆண்டுகளுக்குமுன் அரங்கேறியது. அதையும் அப்படியே சமீபத்தில் **சினிமா படம்** எடுத்தனர். அந்த சினிமாவை தியேட்டரில் **இரண்டு ஜாதியினரும்** அருகருகே அமர்ந்துதான் அந்த காட்சியை பார்த்தார்கள். பார்த்த யாருக்கும் சொரனை இல்லையே!

☐ **தேனி மாவட்டம் குள்ளப்புரத்தில் உள்ள காளியம்மன் கோயிலில்** பட்டியல் ஜாதியினர் **சாமி கும்பிட அனுமதிப்பதில்லை. டொம்புசேரி** கிராமத்தைச் சேர்ந்த பட்டிலின ஜாதியை சேர்ந்த **மாணவ, மாணவிகள்** குறிப்பிட்ட ஜாதியினர் பஸ்ஸில் அமர்ந்தபின் அந்த பஸ்ஸில் மற்ற ஜாதி மாணவிகள் அமர்ந்து செல்ல அனுமதி இல்லை. அடுத்த பஸ்ஸில் ஏரி வர வேண்டும். அல்லது அந்த மாணவிகள் சீட்டில் உட்காராமல் நின்றுகொண்டே வர வேண்டும். என்ன கொடுமை இது ! இளம் வயதிலே இளம் சிரார் மனதில் இம்மக்கள் ஜாதி விஷத்தை விதைத்து விடுகின்றனர்.

இந்த மாதிரி ஆலய விசேஷத்துக்கு முதல்வர் போகாமல் நாகரீகமாக ஒதுங்கிகொள்கிறார். அந்த ஆலயத்தாரும்& ஊர் மக்களும் முதல்வரை அழைப்பதில்லை.

11 வருடங்கள் ஓடாத திருவாரூர் தேரை **கலைஞர் கருணாநிதி** காலத்தில் ஊர் மக்களை திரட்டி பிரிந்த இரண்டு குழுவினரையும் ஒற்றுமைபடுத்தி திருவாரூர் தேர் இழுக்க ஏற்பாடு செய்த பெருமை **கலைஞருக்கே** உண்டு. ஆனால் தேர் இழுக்கும் விழாவிற்கு கலைஞரை வடம்பிடித்து ஆரம்பிக்க ஊர் மக்கள் அழைக்க விரும்பவில்லையே, காரணம் **கலைஞர் ஜாதி** வேறு. இதை யாரும் கண்டுகொள்ளவில்லை. மீடியாவும் அதை பெரிதுபடுத்த விரும்பவில்லை.

**சிறைபிடிக்கப்பட்ட அதிகாரிகள்**

☐ சமீபத்தில் **கரூர் வீரணம்பட்டி காளியம்மன் கோவிலில் சாமி கும்பிடச் சென்ற பட்டியலின இளைஞரை அடித்து உதைத்த** மாற்று ஜாதியினரை **விசாரிக்கச் சென்ற** குளித்தலை **ஆர். டி. ஓ. புஷ்பலதா,** தாசில்தார் **முனிராஜ்** ஆகியோரை அவ்வூர் மக்கள் **சிறை வைத்த** கொடுமையும் நம் தமிழ்நாட்டில்தான் நடந்தது. முதல்வர் அதை கண்டுகொள்ளவில்லை, காரணம் ஓட்டு வங்கி, தைரியமாய் விசாரிக்க சென்ற அதிகாரிகளுக்கு ஏற்பட்ட அவமானத்தை குறித்து அந்த ஊர் தலைவர்களை முதல்வர் கண்டிக்கவில்லையே !

☐ **கரூர்** ரங்கமலை அருகேயுள்ள **மலைப்பட்டி** கிராமத்தில் **உயர் சாதியினரைத்தவிர** மற்றவர்கள் யாரும் **காலில் செருப்பு** அணிய தடை, **பட்டிலினத்தவர்** அவ்வூர் எல்லை வரை டூவீலர்களை **தள்ளிக்கொண்டுதான் செல்ல வேண்டு**ம் என்ற நிலை இன்னும் நீடிக்கிறது. இதைமாற்ற ஆளும் கட்சியினர் கலெக்டர் யாரும் நடவடிக்கை எடுக்கவில்லையே !

☐ மயிலாடுதுறை மாவட்டம் **கப்பூர் ஊராட்சி** வளவராயன்குப்பம் **கிராம கோவில்** திருவிழாவில் **பட்டியலின மக்கள்** மட்டும் தீ மிதிக்க அனுமதி இல்லை. மாப்படுகையில் **சுவாமி வீதியுலாவின்போது** பட்டிலின மக்கள் **வசிக்கும் தெரு வழியே** அந்த **விக்கிரக ஊர்வலம்** போகக்கூடாது என்பது எழுதப்படாத சட்டம். அந்த ஊர் மக்களை நினைத்து வெட்கப்படவேண்டும்.

☐ அதேபோல் **வைத்தீஸ்வரன் கோயில்** பேரூராட்சி, **மயிலாடுதுறை** நகராட்சியில் உள்ள **கடைகளை** பட்டியலின ஜாதி **மக்களுக்கு வாடகைக்கு கொடுப்பதில்லை. நீடூர்** அருகே உள்ள **கொற்கை கிராமத்தில்** பட்டியலின மக்களுக்கு **சலூன் கடைகளில் முடி வெட்டுவதில்லை.** என்ன கொடுமை இது. இந்த நிலை எப்போது மாறும்!

**சாதியைத் தூண்டிய ஆடியோ**

☐ **தூத்துக்குடி** மாவட்டதிலோ நிலைமை இன்னும் கொடூரம் **ஸ்ரீ வைகுண்டம்** அரசுப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே **முறுக்கு கடை** வைத்திருக்கும் செந்தில்நாதனின்

மகனும் **ஸ்ரீவைகுண்டம்** ஒன்றிய ஆளும் கட்சியின் **முன்னாள் தி.மு.க. செயலாளர்** ஸ்ரீவைகுண்ட **பாண்டியனின்** மகனும் ஒரே பள்ளியில் **பிளஸ் +1 படிப்பவர்கள்**. இவர்களுக்குள் வகுப்பில் நடந்த வாய் **சண்டையில்** வைகுண்ட **பாண்டியனின்** மகன், தன்னுடன் **இரண்டு பேரை** அழைத்துக்கொண்டுபோய் **செந்தில்நாதனை** கடைக்குள் புகுந்து **வெட்டிக் கொலை செய்துவிட்டார்கள். இது இந்த மாதம் நடந்தது. இது கொடூரமான கொலை, ஆளும் கட்சியான தி.மு.க. ஆட்சியில் நடந்தது. நடவடிக்கை என்ன ?** முதல்வர் எடுத்த நடவடிக்கை என்ன ?

☐ அதேபோல் **குளத்தூர்** அரசு மேல்நிலைப்பள்ளி **ஆசிரியையே** மாணவன் ஒருவனிடம் **சாதியைத் தூண்டும்** வகையில் ஜாதியைப் பற்றி **பேசிய** ஆடியோ பெரும் வைரலானது நடவடிக்கை எதுவும் இல்லை.

☐ **சேலம்** மேச்சேரியை அடுத்த **காமனேரி** என்ற ஊரில் **6 மாதங்களுக்கு** முன்பு பட்டியலின ஜாதி **மாணவர்கள்** விலை உயர்தர **செருப்பு வாங்கியதற்காக** அடிதடி பிரச்சனை உண்டாகி காவல் நிலையம் வரை பஞ்சாயத்து போனது. உயர் ஜாதி மாணவர்களில் சாதி வெறி இவர்களுக்கு சிபாரிசுக்கு போன குடும்பத்தினரின் கீழ்தரமான புத்தியை என்ன சொல்ல ! **வன்னியனூரில்** பட்டியலின ஆசிரியரை **பள்ளியைவிட்டு இடம் மாற்றினால் மட்டுமே** குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பமுடியும் என்று **இதர ஜாதியினர்** உறுதியாக நின்றுவிட இதனால் ஒரு **வார காலம் பள்ளிக்கு பூட்டு** போடப்பட்டது. இது எங்கோ நடந்த செய்தியில்லை, நம் திராவிட தமிழ்நாட்டில் நடந்ததாகும். கல்வித் துறை ஊர் மக்களுக்கு அடிபணிந்ததா ? உயர் ஜாதி ஆசிரியரை அந்த பள்ளிக்கு மாற்றல் செய்தார்களா? விவரம் அறியவில்லையே.

☐ **நாமக்கல்** பெரிய மணல் பள்ளி பேருந்து நிறுத்தத்தில் **இதர ஜாதி மாணவர்கள்** பஸ்சுக்காக காத்திருக்கும் போது பஸ் வரை **பட்டியலின மாணவர்கள்** தூரத்தில் தனித்து நின்றுதான் **பஸ் ஏற வேண்டும்** என்பது எழுதப்படாத சட்டமாக **இன்றளவிலும் கடைபிடிக்கப்படுகிறது.** யார் இதை தட்டிக்கேட்பது?

**தர்மபுரி** மாவட்டத்தில் கே. **ஈச்சம்பாடி** என்ற கிராமத்தில் **இரண்டு அரசுப் பள்ளிகள் கடந்த 22 ஆண்டுகளாக** சாதி வேறுபாடுகளால் இரண்டு பள்ளிக்கூடங்களும் தனித்தனியாக இயங்குகிறது, அதுவும் **அருகருகே இயங்கி வருகிறது.** இதை வாசிக்கும் உங்களால் இதை ஏற்க முடிகிறதா? ஜாதி ஆதிக்கத்துக்காக **இரண்டு இடங்களில் அருகருகே பள்ளி நடப்பது** இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே **இங்கு மட்டும்தான்.** சாதிதான் முக்கியம்னு சொல்லி பிள்ளைகளின் **பிஞ்சு மனதில் நஞ்சை விதைக்கும்** இந்த பிரச்சனைக்கு **எப்போது விடிவு வரும்?** என்று வேதனைப்படுகிறார் **கே. ஈச்சம்பாடி** பஞ்சாயத்து உறுப்பினர் **ராசி தமிழரசன்.**

**சாதி இரண்டொழிய வேறில்லை** என்ற **நீதிநெறி** வகுப்பறைகளுக்கு மட்டுமல்ல சில **அரசியல் கட்சிகளுக்கும் கிராம தலைவர்களுக்கும், ஊர் மக்களுக்கும் அவை சொல்லப்பட வேண்டும்.**

ஆளுகிறவர்களுக்கும் இந்நிலை அறிவிக்கப்பட வேண்டும், காரணம் நாட்டை ஆளுகின்ற இவர்கள் யாவரும் **சுய மரியாதை** இயக்கத்தை சேர்ந்தவர்கள். **தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழி** வந்தவர்கள் என்று கூறிக்கொள்ள இவர்களுக்கு கொஞ்ஜம் கூட கூச்சமோ வெட்கமோ இல்லாதவர்கள் வேறு என்ன சொல்ல ? தமிழ்நாட்டில் இதற்கென்று **அறநிலை துறையை** ஏற்பாடு செய்து அதற்கு சாமியார் போன்ற தாடி வைத்த மந்திரியை நியமித்துள்ளார்கள். இவர் இந்து ஆலயங்களின், நிலங்களின் வருமானத்தின்தான் கவனம் செலுத்துகிறார். இந்து ஆலயத்தில் ஜாதி சம்பந்தமான புகார்களை, அது சம்பந்தப்பட்ட கொலைகள், மரணங்களை குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இரண்டு கல்வி அமைச்சர்கள் உண்டு. அவர்களும் இதை கண்டுகொள்வதே இல்லை. முதல்வர் காதுக்கு இந்த செய்திகள் போயும் நடவடிக்கை எடுக்க பயப்படுகிறார். காரணம் **ஓட்டு வங்கி** பாதிக்கப்படும். முதல்வரின் ஜாதி காரணமாக அந்த மாதிரி தடை செய்யப்படும் ஆலய விசேஷத்துக்கு **முதல்வர்** அவர்கள் ஆலயத்துக்கு போகாமல் நாகரீகமாக ஒதுங்கிகொள்கிறார். அந்த ஆலயத்தாரும், ஊர் மக்களும் **முதல்வரை** அழைப்பதில்லை.

மேலே வாசித்த சம்பவங்கள் யாவும் வெகு சமீபத்தில் நடந்தவைகளாகும், இவைகளை தங்கள் பத்திரிகை ஆட்களை நேரில் அனுப்பி தகவலையும் ஆதாரத்தையும் சேகரித்த பத்திரிகை ஆசிரியருக்கு வாழ்த்து கூறுகிறேன். இன்னும் தமிழ்நாட்டில் முழு பகுதிகளுக்கும், கிராமங்களுக்கும் சென்றிருந்தால் எத்தனை சங்கதிகள் வெளி வந்திருக்குமோ !

ஜாமக்காரன் : **ஜாதி** வெறி பிடித்த இவர்கள் **காரிலோ, பஸ்ஸிலோ அடிப்பட்டு மரண தருவாயில்** ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டால் அல்லது இவர்கள் **மனைவி அல்லது பெண் பிள்ளைகள் ஆப்பரேசன்** செய்யும்போது உடலில் செலுத்த இரத்தம் வேண்டும் என்று அவசரமாகதேவை என்று அறிவித்தால் இதை இரத்த வங்கியில் இருந்து அல்லது இரத்தம் விலைக்கு கொடுக்கும் நபர்கள் ஆஸ்பத்திரி கேட் பக்கம் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். இந்த குறிப்பிட்ட நபர்களிடம் பணம் கொடுத்து இரத்தம் வாங்கும்போது கொடுக்கப்படும் இரத்தம் **யாருடையது? எந்த ஜாதிக்காரனுடைய இரத்தம்?** என்றா கேட்கிறார்கள். அது பறையன், சக்கிலி, பிராமணன், கவுண்டர் பட்டிலினத்தவர் இரத்தமா என்று விசாரிக்கிறீர்களா? எந்த **ஜாதிக்காரன்** இரத்தமானாலும் சீக்கிரம் கொடுங்கள் என்று கெஞ்சவில்லை? அப்போது ஜாதி எங்கு போனது?

மேலே குறிப்பிட்ட உயர் ஜாதிகார மாணவர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் படிக்கும்

பையன் கல்லூரி படிப்புக்காக நீங்கள் சேர்க்க வேண்டும் என்றால் **எந்த ஜாதி** கல்லூரியில் சேர்ப்பீர்கள். இதையெல்லாம் யோசிக்க மாட்டார்களா ?

## மதம் வேறு ஜாதி வேறு

**மதம்** என்றால் **இந்து மதம், ஜைன மதம், முஸ்லீம் மதம், சீன மதம்,** இப்படி பல மதங்கள் உண்டு. (இதில் நான் **கிறிஸ்தவத்**தை சேர்க்கவில்லை. காரணம் **கிறிஸ்தவம் மதம் அல்ல மார்க்கம்.)**

**ஜாதி** என்றால் **இந்து** மதத்தில் **கவுண்டர், பள்ளர், பறையர், பிள்ளை, நாடார், முதலியார்** இப்படி நீண்டுக்கொண்டே போகிறது.

ஒரே **இந்து மதம் தான்** ஒரே **பிள்ளையாரை தான் முருகரை தான்** கும்பிடுகிறார்கள், ஆனால் தாழ்ந்த ஜாதி என்று கூறப்படும் **பறையர், சக்கிலி** இப்படிப்பட்டவர்கள் இந்து கோவிலுக்குள் பிரவேசித்து சாமி கும்பிட கூடாது. கோவில் **வாசல் படியில்** நின்று வணங்கிவிட்டு போ என்றால் என்ன நியாயம் இது?

## கிறிஸ்தவ மார்க்கம் மட்டும் யோக்கியமா?

**கிறிஸ்தவ மார்க்கம்** பக்தியுள்ள மார்க்கம், **பரலோகத்திற்கு** வழி காட்டும் **மார்க்கம்** என்றெல்லாம் பேசும் இவர்கள் யோக்கியம் எப்படி என்று பாருங்கள். எல்லாரும் வணங்குவது **இயேசு கிறிஸ்துவைதான்,** ஆனால் நெல்லை ஜாதி கிறிஸ்தவர் வேறு ஜாதயிலிருந்து பெண் எடுக்க மாட்டார்கள். **திருநெல்வேலியில் உள்ள ஒரு ஜாதி** கிறிஸ்தவர்களிலேயே – **நாகர்கோவில் ஜாதி கிறிஸ்தவ குடும்த்தில்** (K.K.Dt.) **நாடார்களை பெண்** கேட்டு வர தயங்குவார்கள். அவ்வளவு ஏன் **பம்பாயில் தாராவியில்** ஆராதிக்கும் அத்தனை பேரும் திருநெல்வேலி ஜாதி – நாகர்கோவில் ஜாதி கிறிஸ்தவர்கள் தான். திடீரென்று இவர்களுக்குள் பிரிவினை உண்டானது. உடனே **கன்னியாகுமரி கிறிஸ்தவ ஜாதியினர்** அத்தனை பேரும் **தாராவியிலிருந்து** பிரிந்து **பரேல்** என்ற இடத்தில் **தனி சபை** ஆராதனை துவங்கிவிட்டனர்.

தமிழ்நாட்டின் பல ஊர்களின் C.S.I. சபையில் திருவிருந்தின்போது ஆயர் அப்பம் கொடுத்துக்கொண்டே வந்தபோது திடீரென்று இரண்டுபேர் எழுந்து சென்று தங்கள் இடத்தில் அமர்ந்துகெண்டார்கள். அதன் பிறகு **கடைசியாக** அந்த இருவர் மற்ற சிலரோடு சேர்ந்து திருவிருந்தை எடுத்துக்கொண்டனர். காரணம் கேட்டால் முதல் பந்தியில் அமர்ந்வர்களில் சிலர் **வேறு ஜாதியினர்**, ஏழை கூலிக்காரர்கள், அவர்கள் பக்கத்தில் அமர்ந்து திருவிருந்து எடுக்க இந்த இருவருக்கும் மனம் இல்லை. இந்த பிரச்சனை பெரிதாக வெடித்து ஆராதனையை இரண்டாக உடைத்து காலை **முதல் ஆதாரதனை** என்றும் **இரண்டாம் ஆராதனை** என்றும் மாற்றினார்கள்.

**முதல் ஆராதனையில்** பெரும்பாலும் **திருநெல்வேலி – நாகர்கோவில் கிறிஸதவ ஜாதி இனத்தவரும்**, பெரும் **பணக்காரர்களும்**, பெரும் **பதவியிலிருப்பவர்களும்** ஆராதனையில் திருவிருந்து நேரத்தில் மட்டும் வந்து அதாவது **தாமதமாக** வந்து கலந்துகொண்டு மற்ற யாரோடும் பேச்சு கொடுக்காமல் ஆராதனை முடிவதற்குள் **கார் ஏறி போய்விடுவார்கள்**. இதற்கு பெயரா ஐக்கிய திருவிருந்து?.

இயேசு சொன்னார் நாம் (பிதா – குமாரன் – பரிசுத்தாவியானவர்) ஒன்றாய் இருப்பதுபோல **இவர்களும்** ஒன்றாக இருக்கும்படி வேண்டுகிறேன் என்று இயேசு பிதாவிடம் ஜெபித்தார்.

கிறிஸ்தவ சபையில் **ஒற்றுமை** இல்லை. **ஜாதி** பார்ப்பார்கள். ஆனால் அதே சமயம் இந்த குறிப்பிட்ட **ஜாதியினரால்தான்** பல ஆலயங்கள் பல மிக்ஷனரி பணி தலங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்று **வட இந்திய** மிஷனரி ஊழியத்தில் ஏறக்குறைய 5000 மிஷனரிகள் **திருநெல்வேலி –நாகர்கோவில் கிறிஸ்தவர்களாகத்தான்** இருப்பார்கள். இவர்கள் தான் மிஷனரி **ஊழியத்துக்கு காணிக்கையை அள்ளி** கொடுப்பார்கள்.பல **ஊழியங்களை** இவர்கள் தாங்குவார்கள். **இரட்சிக்கபட்டவர்கள்** என்று கூறிக்கொள்பவர்களின் எண்ணிக்கை இவர்கள் ஜாதியில் ஏராளம். ஆனால் பிரயோஜனம் என்ன? இவர்கள் யாவரும் **தோல் உரிக்கப்படாத** ஆடுகளாக **பலிபீடம் வரை** வந்துவிட்டவர்கள். ஆனால் கர்த்தர் தனக்கு சுகந்த பலியாக அவர்களை ஏற்றுக்கொள்வாரா? நிச்சமில்லை. இவர்கள் யாவரும் நியாய தீர்ப்பில் ஏமாந்து போவார்கள். இவர்கள் ஜாதி என்றே தோல் உரிக்கப்படாதவர்கள்.

காரணம், **ஜாதி** என்ற **தோல் உரிக்கப்படாமல்** ஜாதியை விட்டுக்கொடுக்க பிரியமில்லாமல் **கிறிஸ்தவ விசுவாசிகளாய்** மாறியவர்கள் **ஆலயங்களை** கட்டி **காணிக்கையை** மிஷனரி ஊழியத்துக்கு **அள்ளிக்கொடுத்து** கர்த்தரின் ஆசீர்வாதத்தை பணம் கொடுத்து விலைக்கு வாங்க முயற்சித்த **கிறிஸ்தவ வியாபாரிகள் ஆகும்.**

இவர்கள் வசனம் பிரசங்கிக்கும் கூட்டத்துக்கு பெரும்பாலும் அதிகம் போகமாட்டார்கள். **சுகமளிக்கும்** ஊழியங்களுக்கு **ஜெபத்தில் பெயர் சொல்லி** அழைக்கும் ஊழியங்களின் கூட்டத்துக்கு அதிகம் பங்கெடுப்பார்கள். காரணம் இந்த ஊழியர்கள். இவர்களின் ஊர்காரர்கள். இப்படி எழுவதற்கு வேதனைப்படுகிறேன்.

மேலே வாசித்தபடி **இந்து**மதங்களில் **ஜாதி கொடுமைகளை** பற்றி வாசித்தோம், அரசாங்கமும் ஆளுங்கட்சியும் **ஜாதி ஓட்டை** அடிப்படையாக கொண்டு ஜாதி பெயரில் நடக்கும் அட்டூயங்களை கவணிக்காமல் ஆட்சி நடத்துகிறது. கிறிஸ்தவ சபைகளில் ஜாதி அடிப்படையில் பல **ஆயர்கள்** ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள்.

**நானும் 1957ம் வருடங்களில்** DMK **தி.மு.க. கட்சியின்** அபிமானிதான், **அறிஞர் அண்ணா** அவர்களின் பேச்சை மெய் மறந்து கேட்பேன். **அண்ணா எங்கு** பேசினாலும் அங்கெங்கெல்லாம் போவேன். **கலைஞர் கருணாநிதி** அவர்களின் பேச்சும் எனக்கு பிடிக்கும். **தி.மு.க. நாடகங்களில்** பல இடங்களில் **பின்னணி பாடகனாகவும்** பாடி இருக்கிறேன். **சுயமரியாதை** கொள்கை எனக்கு பிடிக்கும். ஆனால் அங்கும் **ஜாதி** நுழைந்தது. **ஊழல்** நுழைந்தது. மன வேதனையுடன் விலகினேன்.

**இந்திய இராணுவத்தில்** சேர்ந்ததும் அனைத்தும் மறந்தேன். என் எண்ணம், நோக்கம் எல்லாம் மாறியது. **டாக்டர் பணி** செய்ய தொடங்கியபின் நான் ஆஸ்பத்திரி வைத்த இடத்தில் அடுத்துள்ள கிராமங்களில் (1964ம்) **டீ கடைகளில் அலுமினிய டம்ளர்** கயிற்றில் கட்டி வைத்திருப்பார்கள். **கண்ணாடி டம்ளர்** உயர் ஜாதிக்கு, **அலுமினிய டம்பளரில்** பறையர், குறவர் போன்ற தாழ்ந்த இன மக்களுக்கு அதில் **டீ ஊற்றி** கொடுப்பார்கள். குடித்துவிட்டு **அவர்களே கழுவி** வைத்துவிட்டு போக வேண்டும். வேறு சில கிராமங்களில் தேங்காய் **செரட்டையில்** டீ கொடுப்பார்கள். இவர்கள் யாரும் டீ கடையில் உள்ள **பெஞ்ஜில்** அமர்ந்து டீ குடிக்க கூடாது. **டீ கடை பின்புறம் நின்று** குடித்துவிட்டு தேங்காய் செரட்டையை கூறையில் சொருகி வைத்துவிட வேண்டும்.

மேலே எழுதப்பட்ட கட்டுரையை நான் வாசித்தபின் இன்னும் இந்த மோசமான **ஜாதி பிசாசு** நாட்டைவிட்டு நீங்கவில்லை. **தமிழ்நாடு** முழுவதும் **அனைத்து கிராமங்களிலும்** இப்போது உண்டு என்பதை அறிந்து வேதனைப்பட்டேன்.

இந்த கிராமங்களில் உள்ள தாழ்ந்த ஜாதியினருக்கு **சுதந்திர சந்தோஷமும்** இல்லை. **குடியரசு தின** சந்தேஷமும் இல்லை.

இதனால்தான் **டாக்டர் அம்பேத்கார்** அவர்கள் **இந்து மதத்தை**விட்டு மதம் மாற விரும்பினார். முதலில் **இஸ்லாம்** மதத்துக்கு மாறலாம் என்று யோசித்தார். அங்கும் முஸ்லீம் இனத்தில் **பட்டாணி** என்றும் **லப்பை** என்றும் **சியா** என்றும் பல பிரிவுகளை கண்டார். **கிறிஸ்தவ கொள்கைகள்** அவருக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அங்கும் **ஜாதி பிசாசு** விதவித பெயர்களில் அனைத்து சபைகளிலும் விளையாடிக்கொண்டிருப்பதை கண்டார்.

முடிவில் மனம் வெறுத்த நிலையில்தான் **புத்த மதத்தை** அவர் தெரிந்தெடுத்தார். அன்பான வாசகரே உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் வசனத்தின் அடிப்படையில் சாட்சியுடன் வாழுங்கள்.

இயேசுவின் இரத்தத்தால் பாவம் கழுவப்பட்ட யாரும் ஜாதி பார்க்கமாட்டார்கள்.

-----§§§§§§§§-----



# சுதந்திர தின வாழ்த்துதல்

இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க முயற்சித்த தியாகிகளுக்கும் இந்தியாவின் அனைத்து மாநிலத்தில் உள்ள ஆயிரக் கணக்கானவர் ஜாதி, மத, இன மொழி இன வேறுபாடின்றி அரும்பாடுகள்பட்டு பல கொடுமைகளை சகித்து நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்தனர். இந்தியாவிற்கு சுதந்திரம் பெற போராடிய வர்களின் சரித்திரங்களை படிப்பது நல்லது. அவர்களுக்காக அவர்கள் குடும்பத்துக்காக நாம் யாவரும் நன்றியுள்ளவர்களாக அந்த தியாக குடும்பங்களை நினைவு கூறி நம் கர்த்தரை துதிப்போம்.

ஜெய்ஹந்த்

AUGUST 2023

# Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**

| | |
|---|---|
| India | - Rs.60/ |
| Foreign | - Rs.600/ |

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.